2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–05

(ஐ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2018), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2018)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னால், 2702/2008*

@ 9–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

என்கின்ற உச்ச நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு, தமிழினக் காவலர் தலைவர் கலைஞர், வணக்கத்திற்குரிய தளபதி ஆகியோரின் சட்டப் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி; மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்பு பெற்ற தீர்ப்பு. அந்தத் தீர்ப்பின்படி ஒரே இரவில் 2,000–க்கும் மேற்பட்ட இரும்பு தகடுகளால் ஆன விளம்பரப் பலகைகள் சென்னை மாநகராட்சி முழுவதும் வெட்டி தகர்க்கப்பட்டன. உட்லண்ட்ஸ் ஓட்டல் சுற்றுச் சுவரில் 100–க்கும் மேற்பட்ட மூன்றடுக்கு விளம்பரப் பலகைகள், பனகல் பூங்காவில் 88 விளம்பரப் பலகைகள், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பூங்காவில் 18 விளம்பரப் பலகைகள் என்று பூங்காக்களை மறைத்து, சென்னையின் வனப்பை மறைத்து அன்றைக்கு விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டிருந்தன. அந்த விளம்பரப் பலகைகளெல்லாம் ஒரே இரவிலே வெட்டி எடுக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், தொடர் நடவடிக்கையாக 10 நாட்கள் விளம்பரப் பலகைகளே இல்லாத சென்னையாக அன்றைக்கு மாற்றப்பட்டது.

ஆனால், இன்றைக்கு ஒரு தீர்மானம் வந்திருக்கிறது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான எந்தவொரு இடத்திலும் விளம்பரப் பலகைகளை நிறுவுவதற்கு உரிமை வழங்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் நகராட்சி, மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில், குறிப்பாக பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், சாலைகள், சாலைகளின் நடைபாதைகளில் இதுபோன்ற விளம்பரப் பலகைகளை வைத்தால் உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற எமன்களாக அந்த விளம்பரப் பலகைகள் மாறிவிடுகின்றன. நடைபாதைகளை ஆக்கிரமித்து மிக உயரமான girders–ஆல் போடப்படுகின்ற அந்த விளம்பரப் பலகைகள் பலமாக காற்று வீசுகின்றபோது விழுந்து அதிக அளவில் உயிர்ச் சேதமும் ஏற்படும்.

எனவே, மாநகராட்சி இடங்களிலும், நகராட்சி இடங்களிலும் விளம்பரப் பலகைகளை வைப்பதற்கு நாம் இப்போது உரிமை வழங்குகிறோம். இதற்கு முன்னால் இருந்த சட்டத்தின்படி, விதிமுறைகளை மீறி விளம்பரப் பலகைகள் வைத்தவர்களுக்கு 10,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. இப்போது நாம் அதிகபட்சமாக 25,000 ரூபாய் அபராதம் என்கின்ற நிபந்தனையோடு இந்தச் சட்டமுன்வடிவை இங்கே கொண்டுவந்திருக்கிறோம். விளம்பரப் பலகைகளில் இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று

2018 ஜூலை 9] [திரு. மா. சுப்பிரமணியன்]

flex boards; இன்னொன்று, இரும்புத் தகடுகளால் ஆன விளம்பரப் பலகைகள். அரசியல் கட்சிகள் நடத்துகின்ற நிகழ்ச்சிகள், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் வைக்கப்படுவது flex boards. அவற்றிற்கு நாம் அனுமதி தருவது என்பது 4 நாட்கள் அல்லது 5 நாட்கள்தான். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமும், சென்னை போன்ற இடங்களில் மாநகராட்சி ஆணையர் மூலமும் அதற்கான அனுமதி தருவது என்பது வேறு. ஆனால், நிரந்தரமாக இரும்புத் தகடுகளால் அமைக்கப்படுகின்ற விளம்பரப் பலகைகளை வைப்பதற்கு நிச்சயம் இடம் கொடுக்கக் கூடாது. அப்படி வைக்கப்படும்போது சென்னை மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டிலே இருக்கின்ற நகராட்சிகள், மாநகராட்சிகளில் மக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கின்ற எமன்கள் மீண்டும் தலைதூக்கிவிடும். எனவே, அந்த விளம்பரப் பலகைகள் வைப்பதை அனுமதிக்கின்ற இந்தச் சட்டத்தை உடனடியாக இரத்து செய்ய வேண்டும். இந்தச் சட்டமுன்வடிவை யாரும் ஏற்கக் கூடாது என்கின்ற வகையில், இதை இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 3–10

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் சொன்னதைப்போல, உள்ளபடியே முழுமையாக அதைத் தடை செய்ய வேண்டும். ஏனென்று கேட்டால் சாலையில் மீடியன் இருந்தால் இந்தப் பக்கம் நீட்டி இப்படி வைத்திருப்பார்கள். அல்லது அந்தப் பக்கம் அப்படி வைத்துவிடுவார்கள். வண்டி ஓட்டுபவர்கள் அப்படியே பார்த்துக் கொண்டுபோய் இடித்துக்கொண்டு விழுவார்கள். இப்படி banners வைப்பதால்தான் accidents ஏற்படுகின்றன. மாவட்ட ஆட்சியர்களும் இஷ்டத்திற்கு இதற்கு அனுமதி அளித்துவிடுகிறார்கள். அரசுக்கு எவ்வளவோ வருமானம் வருகிறது. இதனால் என்ன பெரிதாக வருமானம் வரப்போகிறது? இதனால், அரசாங்கத்திற்கு பெரியளவில் வருமானம் எதுவும் வரப்போவதில்லை. எனவே, இதை விடுங்கள். நல்லதைச் செய்யுங்கள்.

[2018 ஜூலை 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் பேசினார்கள். இந்தச் சட்டமுன்வடிவினை எதற்காகக் கொண்டுவருகிறோம் என்பதை முழுமையாகச் சொல்கிறேன். தனியார் இடங்களில் விளம்பரப் பலகைகள் வைப்பதால், அவர்கள் சொன்னதுபோல் நிறைய accidents நடைபெறுகின்றன, அப்படி வைக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த Bill–ஐக் கொண்டு வருகிறோம். தனியார் இடங்களில் விளம்பரப் பலகைகள் புற்றீசல்போல பெருகி, எந்த வரையறைகளுமின்றி வைக்கப்படுகின்றன. விரிவான முறையில் இவற்றைக் கட்டுப்படுத்த தற்போது சட்டத்தில் வழிவகையில்லை. தனியார் இடங்களில் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் வைக்கப்படுவதால், வாகன ஓட்டிகளின் கவனம் திசைமாறி, விபத்துகள் ஏற்படவும் காரணமாக இருக்கின்றது. பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யாமல் பல விளம்பரப் பலகைகள் கட்டுமான உறுதித் தன்மையற்றவைகளாக இருப்பதால், பலத்த காற்று வீசும்பொழுது, அவை விழுந்து, பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் இழப்பு ஏற்படுகிறது. மேலும் பல இடங்களில் இடைவெளியில்லாமல் தொடர்ச்சியான விளம்பரப் பலகைகள் வைக்கப்படுவதால், சாலைகளில் செல்லும் வாகன ஓட்டிகளின் பார்வை மறைக்கப்பட்டு விபத்துகள் ஏற்படுகின்றன. இந்தக் காரணங்களினால்தான் அவற்றைத் தடை செய்திருக்கிறோம். அரசாங்க இடத்தில் வைக்கும்போது, பல்வேறு அனுமதிகளை பெற்றுத்தான் வைக்க முடியும். அதனால், அரசாங்க இடங்களில் பல்வேறு விளம்பரப் பலகைகளை வைப்பதற்கு மட்டும் அனுமதியளிக்கப்படும். தனியார் இடங்களுக்கு ban செய்யப்பட்டிருக்கிறது.

மேலும், உயர் நீதிமன்றம் அனுமதியற்ற விளம்பரப் பலகைகளை அகற்ற வேண்டுமென்று பல்வேறு காலகட்டங்களில் அரசுக்கு அறிவுரை வழங்கியுள்ளது. புதுடெல்லி, பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் இதுபோன்று கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில்

2018 ஜூலை 9] [திரு. எஸ்.பி. வேலுமணி]

நாமும் இப்போது கொண்டு வருகிறோம். அதுமட்டுமல்ல, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளுக்குட்பட்ட இடங்களில் பல அழகு நிலையங்கள், ஆரோக்கிய நீரூற்று நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றையும் அந்த சட்டமுன்வடிவிற்குள் கொண்டு வருகிறோம். இவற்றிற்கு நீதிமன்றமும் வழிமுறைகள் வகுத்துக் கொடுத்திருக்கிறது. உள்ளாட்சி அமைப்புகளில் இருக்கக்கூடிய தனியார் விளம்பரப் பலகைகளை தடை செய்கிறோம். அதற்குத்தான் இந்தச் சட்டமுன்வடிவு. தனியார் நிறைய விளம்பரப் பலகைகள் வைத்திருக்கிறார்கள். அவற்றைத் தடுப்பதற்குத்தான் இச்சட்டமுன்வடிவு. மாண்புமிகு முன்னாள் மேயர் அவர்கள் அதைப்பற்றித்தான் பேசுவார்கள் என்று நினைத்தேன். மற்றொரு பொருண்மையை மட்டும் பேசிவிட்டார்கள். அதுபோன்ற தனியார் விளம்பரங்கள் அதிகம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் முக்கியமாக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். இதன்மூலம் விளம்பரப் பலகைகள் வைக்கப்படுவதைக் கட்டுப்படுத்திவிடலாம். நீதிமன்றமும் அறிவுரைகள் வழங்கியுள்ளது. எனவே, இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 17 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 17 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)